Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)

**4 Pages** பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 JUNE 2024

Click - 03 Re. 1

ரினிவல் செய்த சங்க உறுப்பினர்கள் இதுவரை அடையாள அட்டை வாங்காமல் இருந்தால் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். அல்லது உங்கள் பகுதி செயலாளர் துணைத் தலைவர் இணைச் செயலாளர் ஆகியோரிடம் கேட்டு பெறவும். ரினிவலில் உள்ள அடையாள அட்டையை தவறவிட்டவர்கள் சங்க அலுவலகத்தில் 100 ரூபாய் செலுத்தி புதிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**- CVPA**

## 14வது CVPA பொதுத் தேர்தல்
## ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்த ஏற்பாடு!

பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு காத்திருக்கும் முக்கிய தீர்மானங்கள்?

செல் செல்வம் தலைமையிலான தற்போதைய நிர்வாகம், பதவி ஏற்று இரண்டு ஆண்டுகள் முடிய உள்ள நிலையில், இவர்களின் பதவிக்காலமும் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. எனவே அடுத்து நடைபெற உள்ள CVPA வின் 27வது பொதுக்குழு மற்றும்14வது பொதுத் தேர்தல் நடத்துவது குறித்து 26.06.24 அன்று நடைபெற்ற CVPA செயற்குழுவில் ஆலோசிக்கப்பட்டது.

செல்.செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த செயற்குழு கூட்டத்திற்கு நமது சங்க செயலாளர் DM.பிரேம்குமார் முன்னிலை வகித்தார். இந்த செயற்குழுவில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் முன்மொழிபட்டு, அவை பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. பொதுக்குழுவின் இறுதி முடிவுக்குப் பிறகு இந்த தீர்மானங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன.

14வது CVPA பொதுத் தேர்தல் திரு.லயன் விஜயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. கடந்த பொதுக்குழு தீர்மானப்படி, தற்போது நடைபெற இருக்கும் பொது தேர்தல், இனி மூன்று வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் என்பதால், இது முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக பார்க்கப்படுகிறது. தொகுதி சீரமைப்பில் பெரிய மாற்றம் இல்லை என்று சொன்னாலும், சின்ன சின்ன மாற்றங்கள் செய்ய பட்டுள்ளன. இது தவிர எல்லா பதவிகளுக்கும் வேட்பு மனு கட்டணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத்தில் 27 வது பொதுக்குழு மற்றும் 14 வது தேர்தல் நடத்த CVPA செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து முறையான அறிவிப்பு சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட உள்ளது.

## நடந்து முடிந்த செயற்குழுவில் எடுக்கப்பட்ட முக்கிய சில முடிவுகளும் , வரும் பொதுக் குழுவிற்கு பரிந்துரைக்க உள்ள சில முக்கிய தீர்மானங்கள்.

★ அறக்கட்டளையை நிர்வகிக்கும் பொறுப்பு, CVPA தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும், தலைவர் செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் CVPA சங்க நிர்வாகத்தில் பொறுப்பு வகிக்கும் வரை மட்டும், அவர்களுக்கு அறக்கட்டளையை நிர்வாகம் செய்யும் முழு அதிகாரம் உள்ளது.

★ CVPA தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் அறக்கட்டளையின் பொறுப்புகளை ஏற்கும் அன்றைய தினமே அறக்கட்டளையின் உறுப்பினர் தொகையான ரூபாய் பத்தாயிரத்தை கண்டிப்பாக செலுத்தி விட வேண்டும். ஏற்கனவே உறுப்பினர் கட்டணம் செலுத்தி இருந்தால் அவர்களுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

★ ஒவ்வொரு சங்க உறுப்பினரும், அவர்கள் செலுத்தும் புதிய உறுப்பினர் சந்தா, மற்றும் பழைய உறுப்பினர்கள் ரினிவல் சந்தா தொகையில் இருந்து 50% சதவீதம் (500+500=1000) அறக்கட்டளைக்கு நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்படும். இவை இரண்டுக்கும் தனித்தனியாக ரசீது வழங்கப்படும். அறக்கட்டளைக்கு செலுத்தப்படும் நன்கொடை மிக மிக அவசியமானது. இதை ஒவ்வொரு உறுப்பினர்களும் மனதில் கொள்ள வேண்டும்.

★ அறக்கட்டளை மூலமாக நமது சங்க உறுப்பினர்களுக்கு அவர்களின் நோயின் தன்மைக்கு ஏற்ப, மருத்துவ உதவி மற்றும் அறுவை சிகிச்சை செய்ய தேவையான உதவி செய்யப்படும். இதற்கு நோயால் பாதிக்கப்பட்ட நமது சங்க உறுப்பினர் வசிக்கும் பகுதியில் இருக்கும் பகுதி செயலாளர், துணைத் தலைவர், இணைச் செயலாளர் ஆகிய மூவரும் இணைந்து சங்க நிர்வாகத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

★ 65 வயதுக்கு மேற்பட்ட நலிந்த நமது சங்கத்தை சேர்ந்த புகைப்பட கலைஞர்களுக்கு, மாதம்தோறும் அவர்களுக்கு தேவையான மாத்திரை மருந்து வகைகளை நன்கொடையாளர்கள் மூலம் பெற்றுத் தரப்படும்.

★ நலிந்த நமது சங்க உறுப்பினர்களின் 10 பிள்ளைகளுக்கு வருடா வருடம் கல்வி கட்டணம், நோட்டு-புத்தகம் ஆகியவை வழங்க ஏற்பாடு செய்யப்படும். இது நலிந்த கலைஞர்களின் பிள்ளைகளுக்கு மட்டுமே பரிந்துரை செய்யப்படும். இதற்கு நமது சங்க உறுப்பினர் வசிக்கும் பகுதியில் உள்ள,பகுதி செயலாளர், துணைத் தலைவர்,

இணைச் செயலாளர் ஆகிய மூவரும் இணைந்து நமது சங்க நிர்வாகத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

★ பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் டூ ஸ்டேட் போர்டு, சென்ட்ரல் போர்டு, பொதுத்தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெரும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அறக்கட்டளை மூலமாக கல்வி ஊக்கத் தொகை வழங்கப்படும்.

★ தற்போது வழங்கப்பட்டு வரும் ஈமச்ச டங்கு தொகை 30 ஆயிரம் ரூபாய் 20 ஆயிரம் ரூபாய் என குறைக்கப்பட்டு, அந்த தொகை வேறு சில நலத்திட்ட உதவிகளுக்கு பயன்படுத்தப்படும்.

★ இதுவரை மருத்துவ உதவிக்கு கலெக்ஷன் செய்து கொடுக்குமாறு கேட்ட நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அது மறுக்கப்பட்டு வந்தது. இனிமேல் சங்க உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, நமது சங்கம் சார்பாக நேரடியாக சுற்றறிக்கை அனுப்பி உதவித்தொகை பெறப்படும் . ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஒரே நேரத்தில் உதவி கேட்கும் பட்சத்தில், கலெக்ஷன் செய்த பணம் சமமாக பிரித்து தரப்படும்.

★ நலத்திட்ட உதவிகளை உறுப்பினர்கள் பெற்றிட அவர்கள் தொடர்ந்து மூன்று வருடங்கள் கண்டிப்பாக ரினிவலில் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற தகுதியின் அடிப்படையில்தான் வழங்கப்படும். இதற்கு அனைவரும் ஒத்துழைத்து கண்டிப்பாக ரினிவல் செய்ய வேண்டும்.

★ அவசர காலங்களில் சங்க உறுப்பினர்களுக்கு உதவி செய்ய தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவருக்கும் பத்தாயிரம் ரூபாய் வரை செலவிட அதிகாரம் வழங்கப்படுகிறது. நிர்வாக குழுவிற்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவிட அதிகாரம் வழங்கப்படுகிறது. செயற்குழுவிற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை செலவிட அதிகாரம் வழங்கப்படுகிறது.

★ இனி வரும் காலங்களில் நமது சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், மருத்துவ உதவி, அறுவை சிகிச்சை செய்து கொள்ள உதவி, நமது பிள்ளைகளை கல்வியில் ஊக்குவிக்க அவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்குதல், 65 வயதுக்கு மேற்பட்ட மூத்த புகைப்பட கலைஞர்களுக்கு அவர்களுக்கு தேவையான மாத்திரை மருந்து மாதம்தோறும் நன்கொடையாளர்களிடம் இருந்து பெற்று தருவது இவை அனைத்தும் அறக்கட்டளை மூலமாகவே வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

★ நமது சங்கத்தால் வழங்கப்படும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் பெற்றிட அவர்கள் கண்டிப்பாக தொடர்ந்து மூன்று வருடங்கள் ரினிவலில் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் தான் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும். எனவே உறுப்பினர்கள் அனைவரும் கண்டிப்பாக ரினிவல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

★ நலத்திட்ட உதவிகளை பெற்றிட பாதிக்கப்பட்ட நமது சங்க உறுப்பினரோ அல்லது அவர்களின் வாரிசுதாரர்களும் கடிதம் கொடுத்தால் மட்டுமே அவை நடைமுறைப்படுத்தப்படும்.

★ நலத்திட்ட உதவிகள் அனைத்தும் CVPAவின் விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் வழங்க முடியும்.

★ பொதுக்குழு மற்றும் தேர்தல் வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம் தேதியில் இருந்து 10ஆம் தேதிக்குள் நடத்தலாம் என செயற்குழுவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பொதுக்குழு மற்றும் தேர்தல் நடத்த தர்ம பிரகாஷ் உட்பட இரண்டு மூன்று மண்டபங்கள் பரிசீலனையில் உள்ளன. இதன் முடிவு விரைவில் அறிவிக்கப்படும்.

★ 14ஆவது CVPA பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் புதிய வேட்பு மனு கட்டணம்.

★ தலைவர், செயலாளர், பொருளாளர், பி.ஆர்.ஓ பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனு கட்டணம் ரூபாய் 10000/-

துணைத் தலைவர் இணைச் செயலாளர் போன்ற பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனு கட்டணம் ரூபாய் 7000/-

பகுதி செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனு கட்டணம் ரூபாய் 4000/-

14 வது CVPA பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முதல்முறையாக புகைப்படத்துடன் கூடிய உறுப்பினர்களின் அட்ரஸ் லிஸ்ட் வழங்கப்பட உள்ளது. கலர் பிரிண்ட் அவுட் தேவைப்பட்டால் வேட்பாளர்கள் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். தலைவர் செயலாளர் பொருளாளர் பிஆர்ஓ பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கலர் பிரிண்ட் அவுட் கட்டணம் ரூபாய் 1000/-

துணைத் தலைவர் இணைச் செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கலர் பிரிண்ட் அவுட் கட்டணம் ரூபாய் 500/-

பகுதிச் செயலாளர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கலர் பிரிண்ட் அவுட் கட்டணம் ரூபாய் 250/-

மற்றபடி வழக்கம்போல் வழங்கப்படும் பிளாக் அண்ட் ஒயிட் அட்ரஸ் லிஸ்ட் கட்டணம் இன்றி பெற்றுக் கொள்ளலாம்.

பொதுக்குழு மற்றும் தேர்தலில் வாக்களிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய அடையாள அட்டையை கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். இதுவரை சங்க அலுவலகத்தில் இருந்து அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாதவர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர் மூலமாக அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ரினிவெலில் உள்ள அடையாள அட்டையை தவறவிட்டவர்கள் ரூபாய் நூறு செலுத்தி புதிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது சங்க உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று இனி வரும் காலங்களில் பொதுக்குழு மற்றும் தேர்தல் ஆகிய இரண்டையும் தனித்தனியாக நடத்த செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது பொதுக்குழுவுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. அதாவது பொதுக்குழு நடந்து முடிந்த பிறகு 30 நாட்களுக்குள் தேர்தலை நடத்திக் கொள்ள பொதுக்குழுவுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**மறு சீரமைப்பு செய்யப்பட்ட பகுதிகள்.**

சோழிங்கநல்லூர்
96, 97, 119, 126

மடிப்பாக்கம்
16, 61, 91, 114

பல்லாவரம்
27, 43, 70, 74,75, 117

குரோம்பேட்டை
44, 65, 129, 73

# சோனி ஒர்க் ஷாப்

நமது சங்க உறுப்பினர்களுக்காக, சோனி நிறுவனமும், தினா கலர் லேப் நிறுவனமும் இணைந்து சென்னை மவுண்ட் ரோடு எஸ் வி எஸ் கிளப்பில் சோனி ஆல்ஃபா ஈக்கோ சிஸ்டம் குறித்து ஒர்க் ஷாப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தது. சோனியின் தொழில்நுட்ப ஆலோசகர் திரு.ஜோசப் அவர்களும், சோனி ப்ரோ ஸ்பெஷலிஸ்ட் திரு. முஸ்தபா பாஷா அவர்களும் இந்த ஒர்க் ஷாப்பை மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.சோனி கிஷோர் முன்னிலை வகித்தார்.















# திருமண ஒளிப்பதிவில் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் சோனி எஃப் எக்ஸ் 3 மற்றும் எப் எக்ஸ் 30 கேமராக்கள்?

சமீப காலமாக திருமண வீடியோ ஒளிப்பதிவாளர்கள் சோனி எஃப் எக்ஸ் 3 மற்றும் எஃப் எக்ஸ் 30 கேமராவை அதிகமாக வாங்கி வருகின்றனர். இது திருமண ஒளிப் பதிவு முறையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட முக்கிய காரணமாக அமைந்துவருகிறது. குறைந்த பட்ஜெட்டில் கேமரா வாங்க விரும்புகின்றவர்கள் எஃப் எக்ஸ் 30 கேமராவை நாடி செல்கின்றனர் . தரமான கேமரா தேவைப்படுவோர் எஃப் எக்ஸ் 3 கேமராவை நாடி செல்கின்றனர். சோனி நிறுவனமும் திருமண வீடியோ ஒளிப்பதிவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்டம் தோறும் ஒர்க் ஷாப் நடத்தி வருகிறது.

எஃப் எக்ஸ் 3 கேமரா என்பது சினிமா லைன் ஃபுல் பிரேம் கேமரா. இது சோனியின் மிகச்சிறிய சினிமா கேமரா ஆகும்.

எஃப் எக்ஸ் 3 முழு-பிரேம் சென்சார் கொண்டுள்ளதால் பெரிய சென்சார், குறைந்த வெளிச்சம் மற்றும் புலத்தின் ஆழம் குறைவாக இருக்கும். மென்மையான காட்சிகளுக்கு 5- ஆக்ஸிஸ் உறுதிப்படுத்துகிறது. 3.5 மிமீ ஆடியோ மற்றும் ஹெட்ஃபோன் ஜாக் மற்றும் எக்ஸ் எல் ஆர் மேல் கைப்பிடியுடன் வருகிறது. இரண்டு எக்ஸ் எல் ஆர் களை நேரடியாக கேமராவில் உள்ளிடலாம். பெரும்பாலான கேமராக்களை போல் இல்லாமல், இந்த கேமரா பாடியின் ஒவ்வொரு பக்கத்திலும் கால் அங்குல துளைகள் ஆறு உள்ளன. அடிப்படையில் ஒரு கூண்டின் தேவையை நீக்குகிறது, இது ஒருவகையில் நன்றாக இருக்கிறது.

சோனி எஃப்எக்ஸ்3 முழுமையாக வெளிப்படுத்தும் திரையைக் கொண்டுள்ளது, இது குறைந்த கோணங்கள் அல்லது உயர் கோணங்களுக்கு சிறந்தது. தொடுதிரை உங்களுக்குத் தேவைப்படும்போது கண்காணிப்பதற்கும் தானாக கவனம் செலுத்துவதற்கும் எளிதாக இருப்பதாக உள்ளது. கேமராவின் மேற்புறத்தில் ஜூம் ராக்கர் பொருத்தப்பட்டுள்ளது. எனவே, உங்களிடம் பி இஜெட் லென்ஸ் இருந்தால், நீங்கள் பெரிதாக்குவதைக் கட்டுப்படுத்தலாம். இது ஒரு முழு அளவிலான ஹெச் டி எம் ஐ உடன் பொருத்தப்பட்டுள்ளது, இது மிகவும் பொதுவான மற்றும் அதிக நீடித்த போர்ட் ஆகும். வெளிப்புற ரெக்கார்டர் அல்லது மானிட்டரில் பதிவு செய்ய எச் டி எம் ஐப் பயன்படுத்தும் போது இது முக்கியமானது.பாடியின் தூசி மற்றும் ஈரப்பதத்தை எதிர்க்கும். மிக முக்கியமான பட்டன்கள் கேமராவின் ஒரு பக்கத்தில் உள்ளன. எனவே ஒரு கையால் உங்கள் அமைப்புகளை மாற்றுவது எளிது. உங்கள் கட்டை விரலை நகர்த்த வேண்டிய அவசியம் இல்லாமல் நீங்கள் அனைத்து வெளிப்பாடு அமைப்புகளையும் எளிதாக மாற்றலாம். நீங்கள் அதை தனிப் பயனாக்கலாம் மற்றும் நீங்கள் விரும்பும் எந்த பட்டனையும் நிரல் செய்யலாம்.

டேலி லைட்களை இந்த கேமராவில் எல்லா இடங்களிலும் உள்ளன. இந்த கேமராவில் டூயல் கார்டு ஸ்லாட்டுகளும் உள்ளன. நீங்கள் எஸ் டி கார்டுகள் அல்லது புதிய சிஎஃப் வகை-வகை-ஏ கார்டுகள் அல்லது ஒவ்வொன்றிலும் ஒன்றைப் பயன்படுத்தலாம்.புதிய சிஎஃப்கார்டுகளின் நன்மை என்னவென்றால், அவை வேகமாக இருக்கும். அதிக பிட் விகிதத் தில் சிறந்த வீடியோவைப் பெறுவீர்கள். சோனி எஃப் எக்ஸ் 3 ஆனது இரண்டு பதிவு பட்டன்களைக் கொண்டுள்ளது, ஒன்று முன்பக்கத்திலும், மற்றொன்று கேமராவின் மேற்புறத்திலும் உள்ளது. இது வித்தியாசமான கோணங்களில் காட்சிகளை பதிவு செய்வதை எளிதாக்குகிறது.

இந்த கேமராவை அடுத்த கட்டத் திற்கு கொண்டு வரும் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று இதன் உள் அமைக்கப்பட்ட ஃபேன். இது கேமரா அதிக வெப்பமடைவதைத் தடுக்கிறது, இது வீடியோவை எடுக்கும் அனைவருக்கும் முக்கியமான விஷயங்களில் ஒன்றாகும்.

4கே வரை 120 வரை ஆடியோ மற்றும் முழு எச்டி 240 ஃப்ரேம்கள் வரை பதிவு செய்யலாம். 10பிட் 4:2:2 வரை பதிவு செய்யலாம். அது போதவில்லை என்றால், ஹெச் டி எம் ஐ மூலம்16பிட் ரா வை பதிவு செய்யலாம்.

இந்த கேமராவில் ஐ எஸ் ஓ வரம்பு, வெவ்வேறு வண்ண சுயவிவரங்கள் வெவ்வேறு ஐ எஸ் ஓ வரம்புகளை உங்களுக்கு வழங்கும். எடுத்துக்காட்டாக, நீங்கள் எஸ்-லாக்3 ஐ படமெடுத்தால், உங்கள் குறைந்த அடிப்படை 640 ஆகவும், உங்கள் உயர் அடிப்படை 12,800 ஆகவும் இருக்கும். ஆம், 12,800 - நீங்கள் எஸ்- சினி டோன் ஐ படமெடுக்கிறீர்கள் என்றால், உங்கள் குறைந்த அடிப்படை 100 மற்றும் உங்கள் உயர் அடிப்படை, 2000. இந்த அடிப்படை ஐஎஸ்ஓ வரம்புகளுக்குள் இருக்க முயற்சிக்கலாம்.

ஆட்டோஃபோகஸ், நிச்சயமாக, ஒரு கேம்-சேஞ்சர். வீடியோவைப் படமெடுக்கும் போது ஆட்டோ - ஃபோகஸைப் பயன்படுத்தக் கூடாது என்று மக்கள் சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம், ஆனால் இந்த கேமராவில், ஒரு நல்ல, நம்பகமான ஆட்டோஃபோகஸ் இருப்பது வித்தியாசமான உலகத்தை உருவாக்குகிறது. மேலும், நல்ல ஆட்டோஃபோகஸ், ஃப்ரேமிங், இயக்கம் மற்றும் லைட்டிங் போன்ற வீடியோவின் பல்வேறு ஆக்கப்பூர்வமான அம்சங்கள் வீடியோவின் தரத்தை உயர்த்திப் பிடிக்கிறது. இந்த கேமராவில் 627 ஆட்டோஃபோகஸ் புள்ளிகள் உள்ளன, இது சென்சாரின் 95% வரை உள்ளடக்கியது. எனவே, நீங்கள் முகம், கண், ஆப்ஜெக்ட் டிராக்கிங் அல்லது டச் டிராக்கிங் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். எஸ்- லாக் 3 மற்றும் எஸ்- சினி டோன். எஸ் -லாக் 3 உடன், நீங்கள் டைனமிக் வரம்பில் 15 ஸ்டாப் நிறுத்தங்களைப் பெறுவீர்கள், மேலும் எஸ் - சினிடோன் மூலம், நீங்கள் மிகவும் உண்மையான வண்ணம் மற்றும் மென்மையான டோனல் தோற்றத்தைப் பெறுகிறீர்கள்.

வீடியோவுக்காக சோனி இந்த கேமராவை உருவாக்கியது, என்றாலும் இதில் நாம் விரும்பிய புகைப்படங்களை எடுக்க முடியும். சோனி நிறைய லென்ஸ்களை உருவாக்கி வருகிறது.

அவை அளவில் ஒரே மாதிரியானவை, இது கிம்பல் வேலைக்கு சிறந்ததாக அமைகிறது. மறுசீரமைக்காமல் லென்ஸ்களை மாற்றலாம்.

இந்த கேமரா தயாரிப்பு ஆவணப்படம், திருமணங்கள் மற்றும் வீடியோகிராஃபி ஆகியவற்றிற்கு மிகச் சரியான தேர்வாக இருக்கும்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtarunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351